பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
27 04 2026 MONDAY 6 30 PM
வணக்கம் - மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. தமிழக சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி, அடுத்த மாதம் 4ஆம் தேதி காலை 8 மணிக்கு தொடங்கும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

2. இந்த தேர்தலில் தங்கள் கூட்டணி வெற்றிபெறும் என்று திமுகவும், அஇஅதிமுகவும் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

3. காவிரி மேலாண்மை ஆணைய கூட்டத்தை ஒத்தி வைக்க வேண்டும் எனறு பாமக மற்றும் இடதுசாரி கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

4. தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. ஆசிய பீச் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

<<<<<>>>>>

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி, அடுத்த மாதம் 4ஆம் தேதி காலை 8 மணிக்கு தொடங்கும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மாநிலம் முழுவதும் 62 மையங்களில் இப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவித்தார்.

முதலில் தபால் வாக்குகள் எண்ணப்படும் என்றும், அதனைத் தொடர்ந்து 30 நிமிடங்களுக்குப் பின்னர், காலை எட்டரை மணியளவில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவான வாக்குகள் எண்ணப்படும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

கடைசி சுற்று வாக்குகளை எண்ணும் பணி, தபால் வாக்குகளை எண்ணும் பணி முடிந்தவுடன் தொடங்கப்படும் என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஒவ்வொரு வாக்கு எண்ணும் மையத்திலும், ஒரு பகுதியில் தபால் வாக்குகள் மற்றொரு பகுதியில் வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளும், அதற்கான மேஜைகளில் எண்ணப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இப்பணிகளை தனித்தனியே கண்காணிப்பதற்கென, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் நிலையில் அதிகாரிகள் நியமிக்கப்படுவார் என்றும் தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

500 தபால் வாக்குகளுக்கு ஒரு மேஜை என்ற விகிதத்தில் அவை எண்ணப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தேர்தல் பணியில் ஈடுபட்ட 3 லட்சத்து 60 ஆயிரம் அலுவலர்களில், 2 லட்சத்து 88 ஆயிரம் பேர் தபால் வாக்குகளை பதிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதவிர, தேர்தல் பணிக்காக நியமனம் செய்யப்பட்ட காவல்துறை அலுவலர்களும், தேர்தல் கண்காணிப்பு குழுக்களில் பணியாற்றியவர்கள் என 3 லட்சத்து 36 ஆயிரம் பேர் தபால் வாக்குகளாகவும், ஒரு லட்சத்து 10 ஆயிரம் பேர் தேர்தல் பணிச் சான்றிதழ் பெற்று, நேரடியாக வாக்குச்சாவடிகளிலும் தபால் வாக்குகளை செலுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

85 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளி வாக்காளர்கள் ஒரு லட்சத்து 73 ஆயிரம் பேர் தபால் வாக்கு செலுத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சேவை வாக்காளர்கள் 18 ஆயிரம் பேர் வாக்களித்துள்ளதாகவும், அவர்களின் தபால் வாக்குகள் வாக்கு எண்ணிக்கை நாளான அடுத்த மாதம் 4ஆம் தேதி காலை 8 மணிவரை பெறப்படும் என்றும் திருமதி. அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

சட்டப்பேரவை தேர்தலில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றிபெறும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், மாநில அமைச்சருமான திரு. சேகர்பாபு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கொடைக்கானலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், த.வெ.க-கட்சியால் வாக்கு சதவீதம் அதிகரித்துள்ளதாக கூறப்படுவது தவறானது என்றார்.

<<<<<>>>>>

சட்டப்பேரவை தேர்தலில் அஇஅதிமுக கூட்டணி வெற்றிபெறும் என்று அக்கட்சியின் வழக்கறிஞர் பிரிவு செயலாளர் திரு. இன்பதுரை நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், தமிழக மக்களின் பாதுகாவலனாக அஇஅதிமுக திகழ்கிறது என்று குறிப்பிட்டார்.

தமிழக மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்பி வாக்களித்துள்ளதாகவும் திரு. இன்பதுரை தெரிவித்தள்ளார்.

<<<<<>>>>>

காவிரி மேலாண்மை ஆணையத்தின் கூட்டத்தை ஒத்தி வைக்க வேண்டும் என்று பாமக, மார்க்சிஸ்ட் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

இதுதொடர்பாக பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தக் கூட்டம் நாளை மறுநாள் தில்லியில் நடைபெறவுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆணையத்தில் அங்கம் வகிக்கும் தமிழகம், கேரளம் மற்றும் புதுச்சேரியில் முழு அதிகாரம் பெற்ற அரசுகள் இல்லாத சூழலில், இந்தக் கூட்டத்தை நடத்துவது ஏற்புடையதல்ல என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேகதாது அணை குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டால், தமிழகத்தின் சார்பில் எடுக்கப்பட வேண்டிய நிலைப்பாடு குறித்து இதில் பங்கேற்கவுள்ள நீர்வளத்துறை செயலருக்கு எந்த வழிகாட்டலும் வழங்கப்படவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

கூட்டம் நடத்துவதை தவிர்க்க இயலாது என்றால், அதில் மேகதாது அணை குறித்து விவாதிக்கப்படாது என்ற உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் என்று டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. சண்முகமும் இதே கருத்தை வலியுறுத்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

*தமிழகம், கேரளம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 4ஆம் தேதி நடைபெறவுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அவர், தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகள் பொறுப்பேற்ற பின்னர் இந்தக் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று கோரியுள்ளார்.*

*இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியனும் இதே கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்.*

*<<<<<>>>>>*

*தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட் - துரை 38 செகண்ட்ஸ்)*

*<<<<<>>>>>*

*கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், தூத்தக்குடியில் உப்பு உற்பத்தி செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.*

*தொடர்ந்து வேலை கிடைத்து வருவதால், உப்பளத் தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - லெட்சுமணன் 31 செகண்ட்ஸ்)*

*<<<<<>>>>>*

*தஞ்சாவூர் பெரிய கோவில், சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.*

*இதில் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் நந்தகோபால் 50 செகண்ட்ஸ்)*

*<<<<<>>>>>*

*உதகை அருகே, இரண்டு புலிக்குட்டிகள் தாயைப் பிரிந்து தவித்து வருகின்றன.*

இதனையடுத்து, தாய்ப்புலியை தேடும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டு வருவதாக எமது செயதியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சரவணன் 40 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>

மாவட்டச் செய்திகள்

பெரம்பலூர் மாவட்டத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி மையத்தில் இலவசமாக தொழில்பயிற்சி வழங்கப்படுவதாக அதன் இயக்குநர் திரு. முருகையன் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

ராணிப்பேட்டை மாவட்டம், அம்மூர் காப்புக்காடு வனப்பகுதியில் வன விலங்குகளை வேட்டையாட முயன்ற ஒருவரை, வனத்துறையினர் கைது செய்தனர்.

<<<<<>>>>>

மதுரை மாவட்டத்தில் நீட் தேர்வு முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம், ஆட்சியர் திரு. பிரவின்குமார் தலைமையில் இன்று நடைபெற்றது.

<<<<<>>>>>

திருத்துறைப்பூண்டியில் உள்ள அருள்மிகு பிறவி மருந்தீஸ்வரர் ஆலயத்தின் சித்திரை தேரோட்ட விழா வெகுவிமரிசையாக நடைபெற்றது.

<<<<<>>>>>

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய பீச் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் கபடி இறுதியாட்டத்தில், இந்தியா 47-க்கு 31 என்ற புள்ளிக்கணக்கில் இலங்கையை வென்று, தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

ஆடவர் பிரிவில் இந்தியாவிற்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

<<<<<>>>>>

தாமஸ் கோப்பை பேட்மிண்டன் போட்டியில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

டென்மார்க்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்தியா 5-0 என்ற ஆட்டக்கணக்கில் ஆஸ்திரேலியாவை வென்றது.

லக்ஷயா சென், ஆயுஷ் ஷெட்டி, பிரணாய் ஆகியோர் ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் வெற்றி பெற்றனர்.

சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி, ஹம்சகருணன் – அர்ஜூன் இணைகள் இரட்டையர் பிரிவு ஆட்டங்களில் வெற்றி பெற்றன.

<<<<<>>>>>

Madrid ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி - நியூசிலாந்தின் Michael Venus இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

<<<<<END>>>>>